ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2000/2 - 2017 ජනවාරි මස 02 වැනි සඳුදා - 2017.01.02

*2000/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடக்கு மாகாண மாகாண சபை

*2016 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, வடக்கு மாகாண ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்*

*வடக்கு மாகாண, மாகாண சபையால் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்திற்கு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

க. தெய்வேந்திரம்,<br>
செயலாளர்,<br>
பேரவைச் செயலகம்,<br>
வடக்கு மாகாண சபை.

பேரவைச் செயலகம்,<br>
ஏ9, வீதி,<br>
கைதடி,<br>
*2016, திசெம்பர் 28.*

### வடக்கு மாகாண, மாகாண சபை

*2016 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்*

*வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் நிதியாண்டு செலவுகளுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அந்நிதியாண்டில் தேவைப்படும் நிதி மாகாண சபை நிதியத்தினால் அல்லது மாகாண சபையின் அல்லது மாகாண சபைக்கு தகுதி எனக்கொள்ளக்கூடிய வேறு நிதியத்தினால் அல்லது நிதியங்களினால் முற்பணம் வழங்க வசதிகளை செய்து கொடுப்பதற்கும், மாகாண சபையின் திரட்டு நிதியத்திற்கு அப்பணத்தை மீளச் செலுத்த ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர்விளைவான விடயங்களை ஏற்பாடு செய்வதற்குமானதொரு நியதிச் சட்டம்.*

**வடக்கு மாகாண சபையினால் கீழ் வருமாறு ஆக்கப்படுகின்றது**

1. இந்நியதிச் சட்டம் "2016 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்" எனக் குறிப்பிடப்படும். சுருக்கப் பெயர்.

*2017 ஆம் நிதி யாண்டுக்கான ஒதுக்கீடு.*

2. (i) ஏதேனும் நிதித்தொகையொன்றை செலவிடுவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகின்ற யாதாயினுமொரு சட்டத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்நியதிச் சட்டத்தில் 2017 ஆம் நிதியாண்டு எனக் குறிப்பிடப்படும் 2017, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2017, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடையும் காலத்திற்கு இடைப்பட்ட காலங்களில் வடக்கு மாகாண சபையின் செலவுகளுக்கு என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை இருபத்திரண்டாயிரத்து எழுநூற்று இருபத்து எட்டு மில்லியன் நூற்று பதினேழு ஆயிரம் ரூபாவானது (ருபா 22,728,117,000).

(அ) மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் உதவிகளினாலும் ;

அத்துடன்

(ஆ) மாகாண சபை நிதியத்தினால் அல்லது தகுதி எனக்கொள்ளக்கூடிய வேறொரு நிதியத்தினால் அல்லது நிதியங்களினால் அல்லது தீர்வு செய்கைகளினால் இச்சட்டத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டவாறு செலவு செய்யப்படுதல் வேண்டும்.

(ii) இந்நியதிச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் முதலாவது நிரலில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சார்பான வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான செலவீனங்கள் யாவும் வடக்கு மாகாண சபையின் அந்நிதியாண்டின் அவ்விடயத்துக்கான பெறுவனவுகளில் இருந்து மாத்திரமே செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் குறித்த செலவீனமானது அந்த விடயத்திற்கெதிரே குறிக்கப்பட்டுள்ள எல்லைகளை விஞ்சாது இருத்தல் வேண்டும்.

3. இந்நியதிச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் 2017 ஆம் நிதியாண்டின் முடிவில் நிலுவையாகவுள்ள வரவு மீதி, சொல்லப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதே தலைப்பில் அதி உச்ச எல்லையைத் தாண்டக்கூடாது என்பதுடன் குறித்த நிதியாண்டின் முடிவில் அவ்விடயத்தின் மொத்தப்பரப்புக்கள் காட்டப்பட்டுள்ள எல்லைகளை விஞ்சவும் கூடாது.

*நிகழ்ச்சித் திட்டம் மீண்டெழும் செலவினம் தொடர்பாக ஒதுக் கப்பட்டு அதனால் செலவிடப்படாத நிதி அந்நிகழ்ச் சித் திட்டத்தின் வேறு ஒதுக்கீடு ஒன்றிற்கு அல்லது அச்செலவுகளை வேறு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாற் றம் செய்யும் அதிகாரம்.*

4. (i) இச்சட்டத்தின் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதாவது ஒரு தலைப்பின் கீழ் ஏதாவது நிகழ்ச்சித்திட்டத்தில் மீண்டெழும் செலவினங்களுக்கு அட்டவணையின் ஏற்பாடுகளுக்கேற்ப நிதி ஒதுக்கப்பட்டு இருப்பினும் அது செலவிடப்படாதிருந்து அல்லது எதிர்காலத்தில் செலவு செய்யப்படாது எனக்கருதக்கூடிய ஏதாவது பணத்தொகை அந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலதனச் செலவின் ஒதுக்கீட்டிற்கு அல்லது அத்தலைப்பின் கீழ் வேறு ஏதாவது நிகழ்ச்சித் திட்டத்தின் மீண்டெழும் செலவிற்கோ அல்லது மூலதனச் செலவிற்கோ ஒதுக்கீடு செய்வதற்கு பிரதம செயலாளரின் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தரின் உத்தரவு பிரகாரம் மாற்றம் செய்யலாம்.

*மூலதன செல வினங்களது ஒதுக் கீடுகளை வேறு தலைப்புக்களுக்கு மாற்றுவதற்குள்ள அதிகாரம்.*

(ii) மூலதன செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையினை அட்டவணை ஒன்றில் காட்டப்பட்டுள்ள வேறு ஏதேனும் தலைப்பிற்கு மாற்றம் செய்வதற்கு மாகாண சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

*ஏற்கனவே அதி காரம்அளிக்கப் பட்ட செலவுகளை வரையறுப்பதற்கு பிரதான அமைச் சர் அவர்களுக்கு உள்ள அதிகாரம்.*

5. (i) அதிகாரம் அளிக்கப்பட்ட செலவுகளைச் செய்வதற்கு வரிகளிலிருந்தும், வேறு ஏதேனும் மூலங்களிலிருந்தும் பெறப்படும் பெறுகைகள் எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகையைவிட குறையலாம் என,

அல்லது

(ii) ஏதாவது விடயம் அல்லது விடயங்களுக்கு ஆரம்பத்தில் ஒதுக்கிய பணம் மேலும் தேவைப்பட மாட்டாது என முதலமைச்சர் திருப்தியடையும் நிலையில், மாகாண நிதியத்தில் அல்லது மாகாண சபையின் அல்லது மாகாண சபைக்கு தகுதி எனக் கொள்ளக்கூடிய வேறு நிதியத்தில் அல்லது வேறு நிதியங்களில் இருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ்ச் செலவு செய்வதற்கு முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணம் முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதியினை அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செலவினத்தை எதிர்கொள்வதற்காக மீளப்பெறுவதற்கு முதலமைச்சரின் அனுமதியுடன் பிரதம செயலாளருக்கு முடியுமாதல் வேண்டும்.

6. முதலமைச்சர் 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உத்தரவு ஒன்றின் மேல். *(இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதியுயர் எல்லை, ஆகக் குறைந்த எல்லை என்பவற்றை மாற்றுவதற்கு உள்ள அதிகாரம்.)*

(i) இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் அதிஉயர் எல்லைகளுள் எதனையும் ;

(ii) இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளையும் மாற்றவோ அல்லது திருத்தவோ முடியும்.

7. வடக்கு மாகாண சபையினால் ஏதேனும் பொருத்தமான பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையின் தோதான நிரல்களுக்கு ஏதேனும் செயற்பாட்டைச் சேர்ப்பதன் மூலமும், அத்துடன், *(இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் திருத்தஞ் செய்வதற்கு மாகாண சபைக்கு உள்ள அதிகாரம்.)*

(i) அத்தகைய விடயம் தொடர்பான எல்லா அதியுயர் எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவையேனும் ஒன்றையும் ;

(ii) அத்தகையவிடயம் தொடர்பான ஆகக்குறைந்த எல்லைகளையும் ஏற்பாடு செய்து திருத்தம் செய்யலாம்.

8. பிரதிப் பிரதம செயலாளர் நிதி அலுவலகத்தின் செலவின நிதி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கருத்திட்டம் நான்கின் (421-08-04) கீழ் குறித்துக் காட்டப்படும் செலவினங்கள் பிரதம செயலாளரினால் முதலாவது அட்டவணையின் எந்தவொரு செலவினத் தலைப்பிற்கும் மாற்ற முடியும். எவ்வாறாயினும் குறித்த பரிமாற்றம் குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றின் மூலம் மாகாண சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

9. இந்நியதிச் சட்டத்தின் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் தமிழ் மொழியே மேலோங்கி நிற்கும். *(வேறுபாடு ஏற்பட்டால் தமிழ் உரையே மேலோங்கி நிற்கும்.)*

## முதலாவது அட்டவணை

| | | | மீண்டும்வரும் செலவினம் (ரூபா) | மூலதன செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|
| **ஆளுநர் செயலகம்** | | | | |
| தலைப்பு 400 | | | | |
| மீண்டும்வரும் செலவினம் | | 57,309,000 | | |
| மூலதனம் செலவினம் | | 2,000,000 | | |
| சி. பி. ஜி. | 2,000,000 | | | |
| பி. எஸ். டி. ஜி. | - | | | |
| தலைப்பு 400 | | | | |
| தலைப்பு 400 ஆளுநர் செயலகம் | | | | |
| நிகழ்ச்சித் திட்டம் 03- மாகாண நிர்வாகம் | | | 57,309,000 | 2,000,000 |
| **மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு** | | | | |
| தலைப்பு 401 | | | | |
| மீண்டுவரும் செலவினம் | | 27,000,000 | | |
| மூலதன செலவினம் | | 1,000,000 | | |
| சி. பி. ஜி. | 1,000,000 | | | |

| | மீண்டும்வரும் செலவினம் (ரூபா) | மூலதன செலவினம் (ரூபா) |
|---|---|---|
| தலைப்பு 401 | | |
| தலைப்பு 401 **மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு** | | |
| நிகழ்ச்சித் திட்டம் 03- மாகாண நிர்வாகம் | 27,000,000 | 1,000,000 |

**மாகாண பேரவைச் செயலகம்**

தலைப்பு 402

| | | |
|---|---|---|
| மீண்டும்வரும் செலவினம் | | 114,200,000 |
| மூலதனசெலவினம் | | 2,000,000 |
| சி. பி. ஜி. | 2,000,000 | |

| | மீண்டும்வரும் செலவினம் (ரூபா) | மூலதன செலவினம் (ரூபா) |
|---|---|---|
| தலைப்பு 402 | | |
| தலைப்பு 402 **மாகாண பேரவைச் செயலகம்** | | |
| நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | 114,200,000 | 200,000,000 |

**முதலமைச்சரின் அமைச்சு - நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, சமூக சேவைகளும் புனர்வாழ்வழித்தலும், மகளிர் விவகாரம், மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் சுற்றுலா உள்ளூராட்சி, மற்றும் மாகாண நிர்வாகம்.**

தலைப்புக்கள் : 410, 411, 412, 413, 414

| | | |
|---|---|---|
| மீண்டும்வரும் செலவினம் | | 2,430,611,000 |
| மூலதன செலவினம் | | 301,500,000 |
| சி.பி. ஜி. | 17,500,000 | |
| பி. எஸ். டி. ஜி. | 284,000,000 | |

**முதலமைச்சரின் அமைச்சு - உள்ளூராட்சி, தொழிற்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு, காணி, சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வழித்தலும் மகளிர் விவகாரம், மின்சக்தி, வீடமைப்பும்**

| | மீண்டும்வரும் செலவினம் (ரூபா) | மூலதன செலவினம் (ரூபா) |
|---|---|---|
| தலைப்பு 410 நிர்மாணமும் மற்றும் சுற்றுலா. | | |
| நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | 63,18,000 | 50,000,000 |
| தலைப்பு 411 மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித் திட்டம் 60 - சனசமூக அபிவிருத்தி | 1,840,162,000 | 202,500,000 |
| தலைப்பு 412 மாகாண தொழிற்துறைத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித் திட்டம் 51 - கைத்தொழில் அபிவிருத்தி | 74,560,000 | 17,000,000 |
| தலைப்பு 413 மாகாண காணி நிர்வாகத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித் திட்டம் 40 - காணி நிர்வாகமும் அபிவிருத்தியும் | 85,126,000 | 5,000,000 |
| தலைப்பு 414 மாகாண சமூக சேவைகள் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித் திட்டம் 95 - சமூக பாதுகாப்பு | 367,625,000 | 27,000,000 |

**பிரதம செயலாளர் செயலகம்**

தலைப்பு 420, 421, 422, 423, 424, 425, 426

| | | |
|---|---|---|
| மீண்டும்வரும் செலவினம் | | 872,781,000 |
| மூலதன செலவினம் | | 393,380,000 |
| சி. பி. ஜி. | 261,200,000 | |
| பி. எஸ். டி. ஜி. | 132,180,000 | |

| | | மீண்டும்வரும் செலவினம் (ரூபா) | மூலதன செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| தலைப்பு 420 | பிரதம செயலாளர் செயலகம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | 71,256,000 | 4,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 09 - மனிதவள முகாமைத்துவம் | 25,300,000 | 2,000,000 |
| தலைப்பு 421 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிதி | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 08 - நிதி முகாமைத்துவம் | 552,525,000 | 378,380,000 |
| தலைப்பு 422 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 52 - பிராந்திய அபிவிருத்தி | 47,200,000 | 1,500,000 |
| தலைப்பு 423 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - பொறியியல் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 15 - புனர்வாழ்வும் புனருத்தாரணமும் | 14,800,000 | 1,500,000 |
| தலைப்பு 424 | பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - ஆளணிப் பயிற்சி | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 09 - மனிதவள முகாமைத்துவ | 28,600,000 | 3,000,000 |
| தலைப்பு 425 | மாகாண இறைவரித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 10 - வரி மற்றும் தீர்வைகள் மீதான நிர்வாகம் | 16,100,000 | 1,000,000 |
| தலைப்பு 426 | மாகாண கட்டடங்கள் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 15 - புனர்வாழ்வும் புனருத்தாரணமும் | 117,000,000 | 2,000,000 |

மாகாண விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல், சுற்றாடல், உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

தலைப்புக்கள் 430, 431, 432, 433, 434, 435

| | | |
|---|---|---|
| மீண்டும்வரும் செலவினம் | | 983,784,000 |
| மூலதன செலவினம் | | 289,500,000 |
| சி.பி. ஜி. | 23,500,000 | |
| பி. எஸ். டி. ஜி. | 266,000,000 | |

**மாகாண விவசாயம், கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல், சுற்றாடல், உணவு வழங்கலும்**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 430 | விநியோகமும் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 46,386,000 | 8,000,000 |
| தலைப்பு 431 | **மாகாண விவசாயத் திணைக்களம்** | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 -மாகாண நிர்வாகம் | 24,933,000 | 139,500,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 4 - விவசாய அபிவிருத்தி | 219,600,000 | |
| தலைப்பு 432 | **மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்** | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 56,986,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 45 - கால்நடை அபிவிருத்தி | 156,900,000 | 86,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 56 - ஆராய்ச்சிகளும் அபிவிருத்தியும் | 4,005,000 | |
| தலைப்பு 433 | **மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்** | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 43 - நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவம் | 311,000,000 | 48,000,000 |

| | மீண்டும்வரும் செலவினம் (ரூபா) | மூலதன செலவினம் (ரூபா) |
|---|---|---|
| **தலைப்பு 434 மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்** | | |
| நிகழ்ச்சித் திட்டம் 53 -கூட்டுறவு அபிவிருத்தி | 153,482,000 | 7,000,000 |
| தலைப்பு 435 மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | | |
| நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | 10,492,000 | 1,000,000 |

**மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**

தலைப்புக்கள் : 440, 441, 442

| | | |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | | 9,670,871,000 |
| மூலதனம் செலவினம் | | 616,500,000 |
| சி. பி. ஜி. | 16,500,000 | |
| பி. எஸ். டி. ஜி. | 285,000,000 | |
| ரி. எஸ். ஈ. பி. | 315,000,000 | |

| | மீண்டும்வரும் செலவினம் (ரூபா) | மூலதன செலவினம் (ரூபா) |
|---|---|---|
| தலைப்பு 440 மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | | |
| நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | 63,471,000 | |
| நிகழ்ச்சித் திட்டம் 09 - மனிதவள முகாமைத்துவம் | 10,608,000 | 20,000,000 |
| நிகழ்ச்சித் திட்டம் 80 - ஆரம்ப நிலைக் கல்வி | 113,010,000 | |
| நிகழ்ச்சித் திட்டம் 93 - சமயம் மற்றும் கலாச்சார விவகாரங்கள் | 46,656,000 | |
| தலைப்பு 441 மாகாண கல்வித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித் திட்டம் 03 -மாகாண நிர்வாகம் | 523,575,000 | |
| நிகழ்ச்சித் திட்டம் 80 -ஆரம்ப நிலைக் கல்வி | 3,237,162,000 | |
| நிகழ்ச்சித் திட்டம் 81 - இரண்டாம் நிலைக் கல்வி | 5,575,000,000 | 579,500,000 |
| நிகழ்ச்சித் திட்டம் 87 - கல்வித்துறைக்கு உட்பிரவேசித் தலையும் பங்குபற்றலையும் அதிகரிக்க | 30,439,000 | |
| நிகழ்ச்சித் திட்டம் 88 - கல்வித்துறைக்கு திட்டமிட்ட சிறந்த சேவையினை வழங்கல் | 6,069,000 | |
| தலைப்பு 442 மாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித் திட்டம் 90 - மகிழ்வூட்டுதலும் விளையாட்டும் | 64,881,000 | 17,000,000 |

**மாகாண சுகாதாரம், சுதேச மருத்துவம் மற்றும் நன்னடத்தையும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு**

தலைப்பு 450, 451, 452, 453

| | | |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | | 5,267,455,000 |
| மூலதன செலவினம் | | 786,500,000 |
| சி. பி. ஜி. | 16,500,000 | |
| பி. எஸ். டி. ஜி. | 410,000,000 | |
| எச். எஸ். டி. பி. | 360,000,000 | |

| | மீண்டும்வரும் செலவினம் (ரூபா) | மூலதன செலவினம் (ரூபா) |
|---|---|---|
| தலைப்பு 450 மாகாண சுகாதார, சுதேச மருத்துவ சேவைகள், மற்றும் நன்னடத்தையும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு | | |
| நிகழ்ச்சித் திட்டம் 03 -மாகாண நிர்வாகம் | 47,495,000 | 8,000,000 |

| | மீண்டும்வரும் செலவினம் (ரூபா) | மூலதன செலவினம் (ரூபா) |
|---|---|---|
| **தலைப்பு 451மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்** | | |
| நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | 41,700,000 | |
| நிகழ்ச்சித் திட்டம் 09 - மனிதவள முகாமைத்துவம் | 4,592,000 | |
| நிகழ்ச்சித் திட்டம் 70 - வைத்தியசாலை சேவைகள் | 393,497,000 | 699,500,000 |
| நிகழ்ச்சித் திட்டம் 71 - மக்கள் சுகாதார சேவைகள் | 3,742,606,000 | |
| நிகழ்ச்சித் திட்டம் 72 - பொதுச் சுகாதார சேவைகள் | 700,000,000 | |
| **தலைப்பு 452 மாகாண சுதேச மருத்துவ சேவைகள் திணைக்களம்** | | |
| நிகழ்ச்சித் திட்டம் 03 - மாகாண நிர்வாகம் | 40,050,000 | 37,000,000 |
| நிகழ்ச்சித் திட்டம் 73 - சுதேச வைத்தியத்துறை | 191,015,000 | |
| தலைப்பு 453 **மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்** | | |
| நிகழ்ச்சித் திட்டம் 95 - சமூக பாதுகாப்பு | 106,500,000 | 42,000,000 |

**மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு**

தலைப்பு 460, 461, 462, 463

| | | |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | | 420,726,000 |
| மூலதன செலவினம் | | 293,000,000 |
| சி. பி. ஜி. | 13,000,000 | |
| பி. எஸ். டி. ஜி. | 280,000,000 | |

**மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வரத்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்திமற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு**

| | மீண்டும்வரும் செலவினம் (ரூபா) | மூலதன செலவினம் (ரூபா) |
|---|---|---|
| தலைப்பு 460 | | |
| நிகழ்ச்சித் திட்டம் 03 -மாகாண நிர்வாகம் | 48,587,000 | 58,000,000 |
| தலைப்பு 461 மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித் திட்டம் 60 - சனசமூக அபிவிருத்தி | 85,839,000 | 32,000,000 |
| தலைப்பு 462 மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித் 50 - பெருந்தெருக்களின் கட்டுமானமும் பராமரிப்பும் | 242,800,000 | 202,000,000 |
| ක්‍ෂනයන 463 மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | | |
| நிகழ்ச்சித் திட்டம் 10 - வரி மற்றும் தீர்வைகள் மீதான நிர்வாகம் | 43,500,000 | 1,000,000 |
| மொத்தம் | **19,844,737,000** | **2,883,380,000** |
| | | **22,728,117,000** |

| | மீண்டும்வரும் செலவினம் (ரூபா) | மூலதன செலவினம் (ரூபா) |
|---|---|---|

***மூலதனச் செலவினங்களின் விபரம் :***

| | | |
|---|---|---|
| *பிரமாண அடிப்படையிலான கொடை* (CBG) | | *551,200,000* |
| *மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை* (PSDG) | | *1,657,180,000* |
| *பாடசாலைக் கல்வியை ஓர் அறிவு மையத்தின் அடிப்படையாக மாற்றும் செயற்திட்டம்* (TSEP) | | *315,000,000* |
| *சுகாதாரத் துறை அபிவிருத்திக் கருத்திட்டம்* (HSDP) | | *360,000,000* |

*1- 450*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.